அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 17/96

எனது இல. 111/163/1/எல்/எல்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளும
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7
1996.06.20 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

## அரச உத்தியோகத்தர்களின் அலுவலக நேரங்கள்

தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XVIII இன் 1:1 மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுவதுடன், அரச சேவைகளிலுள்ள கனிஷ்ட ஊழியர்கள் தவிர்ந்த மற்றைய உத்தியோகத்தர்கள் சகலரினதும் அலுவலக நேரம் (மதிய உணவுக்காக 30 நிமிடங்களுடன்) 1996.06.24 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வண்ண மு.ப.9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.45 மணி வரை அமைய வேண்டுமென அரசு தீர்மானித்துள்ளது. பணக் கொடுக்கல் வாங்கல்கள் முதலிய அலுவல்களுக்காக அரச அலுவலகங்கள் யாவும் வேலை செய்கின்ற நாட்களில் பி.ப.3.30 மணி வ திறந்து வைப்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

2. அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 162இல் குறிப்பிட்டுள்ளவாறு கனிஷ்ட ஊழியர்கள் அதாவது அலுவலகப் பணியாளர்கள், சைக்கிள் ஏவலாளர்கள், அலுவலகத் தொழிலாளிகள் மற்றும் அதையொத்த சேவைகளிலுள்ள ஊழியர்களின் அலுவலக நே (மதிய உணவுக்காக 30 நிமிடங்களுடன்) மு.ப.8.30 மணி தொடக்கம் பி.ப. வரை அமையும்.

3. அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 3/92 மற்றும் 6/94 மூலம் தாமதம வருகின்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் மேற்குறிப்பிட்ட புதிய அலுவலக நேரங்களுக்கு இசைவாக திருத்தப்படுமென்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

ஒப்பம்: ஆர்.எஸ்.ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளு
அலுவல்கள் அமைச்சு.